## அத்தியாயம் 13

# அதிக மேன்மையான வழி

12:31 பகுதியில் “அதிக மேன்மையான வழியை” சுட்டிக்காட்டிய பின், பவுல், வேதாகமத்தின், மிக நேர்த்தியான மற்றும் ஆழமான பகுதியை ஆரம்பித்தார். அவர் வெவ்வேறு அற்புத வரங்களைக் குறித்து சர்ச்சித்துக் கொண்டிருந்தார். அதிகம் காணப்படுகிற வரங்களுக்காக உலக சிந்தையினாலான போட்டியானது, சபையில் இடையூறை உண்டாக்கினது. மற்றும், சரீரத்தின் ஐக்கியத்திற்காக ஆவியின் வரங்கள் செய்ய வேண்டிய பங்களிப்புகளை குறித்து பவுல் வலியுறுத்திக் கொண்டிருந்தார். அந்த நொடியில், கொரிந்தியருக்கு தெரிந்திருந்த பிரமிக்கத்தக்க வரங்களை ஒரு புறம் வைத்து அன்பைக் குறித்துப் பேசினார், யாதொரு ஆவியானவரின் தெய்வீக பகிர்தலும் இல்லாத ஒரு பண்பு. ஒரு நொடியில் வந்து போகும் இரக்கமுள்ள உணர்வைப் போன்ற அன்பைக் குறித்து இங்கு அவர் எழுதவில்லை. தீர்மானங்களிலிருந்து ஆரம்பித்து, கிரியையில் முடிவடையும் ஒரு தீர்க்கப்பட்ட மனநிலையாக இருக்கிறது.

கிறிஸ்தவ வாழ்க்கையில், அன்பின் மேலாதிக்கத்தைக் குறித்து வேதாகமம் கொடுக்கக்கூடிய மகா பெரிய இந்த அறிக்கையானது, சரீரத்தில் ஒற்றுமை மற்றும் வேற்றுமையைக் குறித்த பவுலின் சர்ச்சை சம்பந்தம் இல்லாமல் இல்லை. ஒரு சபையில் சமாதானம் மற்றும் அன்பு ஆளும்போது, பகுதியாக இருப்பதை விட அதனுடைய தொகை அதிகமாக இருக்கும் என்று ஆழமாகக் கூருவதாக ஜனங்கள் நினைக்கிறார்கள். தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் அன்புகூர்ந்து ஆதரித்தால், ஒவ்-வொரு வருடைய வரங்களும் பெருகுகின்றது என்று சொல்ல மிக சரியானதாக இருக்கும். தனிப்பட்ட நபர்கள் சக விசுவாசிகளுக்கு ஆதரவைக் கொடுத்து, ஆதரவைப் பெறும்போது, தனிப்பட்ட நபர்களிடத்தில் முழுமைக்கு அதிகமாகவே பங்களிப்பார்கள், ஆனால் முழுமையானது ஒவ்வொரு பகுதியின் தொகைக்கு மிக அதிகமாக இருக்காது.

அன்பின் மேலாதிக்கத்தைக் குறித்த பவுலின் சாட்சியானது, வேதாகம வசனங்களில் போதுமான ஆதரவைப் பெறுகிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எல்லா கட்டளைகளில் சிறந்ததைச் சொல்லும்படி கேட்டபோது, இயேசு உடனடியாக பதிலளித்தார். யூத மத்திய கால அறிஞர் Maimonides (1135-1204) நியாயப்பிரமாணத்தில் மொத்தம் 613 கட்டளைகளை கண்டுப் பிடிக்கையில்[1]; இயேசு அதை

இரண்டாக சுருக்கினார்:

> பிரதானமானது, "இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக." இரண்டாவது, "இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்" (மாற்கு 12:29-31).

கிறிஸ்தவர்கள், மற்றவர்களுக்கு தேவனுடைய கிருபை மற்றும் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் வாங்கிக்கொண்டதினாலே பாவத்திலிருந்து இரட்சிப்பு உண்டு என்று சொல்ல அன்பானது ஒரு ஏவுகிற வல்லமையாக இருக்கிறது. "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" என்று கொரிந்தியருக்கு பவுல் அடுத்த நிருபத்தில் எழுதினார், "ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்" (2 கொரி. 5:14; NRSV).

இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கை செய்பவர்களுக்கு "அன்பு," "விசுவாசம்," மற்றும் "கிருபை" போன்ற வார்த்தைகள் பாறை போன்ற கொள்கையை அடையாளம் காட்டுகிறது. அரசியல் பகுதிகளில், முக்கிய வார்த்தைகள், "தேசப்பற்று," "சுதந்திரம்," மற்றும் "குடும்பமாக" இருக்கிறது. இந்த வார்த்தைகளில் இருக்கிற சிக்கல்கள் என்னவென்றால், இவைகள், ஒரு ஸ்தூலமான அர்த்தமில்லாமல், மிகவும் நெகிழ்வாகி விடுகிறது.

நீடிய வரலாறில், கிறிஸ்துவின் சபையானது அன்பு, விசுவாசம் மற்றும் கிருபை என்னும் கொள்கையை விவரிப்பதில் ஈர்க்கப் பட்டிருக்கிறது. ஒரு வார்த்தையை விவரிப்பது அதைக் கட்டுப்படுத்தி, அந்த வார்த்தையிலே அறியப்பட்ட எல்லாமே தகுதியுள்ளதாக இருப்பதில்லை என்று சொல்லுவதே. ஒருவர் கொள்கைகளை ஒரு அளவிற்கு புரிந்து கொள்ளாமல், அந்த கொள்கைகளால் வழி நடத்தப்பட முடியாது. எபிரெயருடைய எழுத்தாளன் "விசுவாசத்தை" வார்த்தையில் பயன்படுத்தும் உதாரணங்களைக் கொடுத்தார் (எபி. 11). 1 கொரிந்தியர் 13ல் பவுல், "அன்பை" பலனில்லாத அளவிலிருந்து ஸ்தூலமான அளவிற்கு கொண்டு வந்ததற்காக அவருக்கு கிறிஸ்தவர்கள் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## அன்பின் முக்கியத்துவம் (13:1-3)

**[1]நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன். [2]நான்**

**தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. 3எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிரா விட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.**

ஆவியானவர் பவுலின் வாசகர்களுக்கு வித்தியாசமான வரங்களைக் கொடுத்திருந்தார்; ஆனால், அடிப்படையில், அப்போஸ்தலன், அன்பு இல்லாமல், அவைகள் எல்லாம் வெறும் ஓசையே என்று சொன்னார் (13:1). பவுல், கொரிந்தியர் மீது தன் கையை வைத்த போது ஆவியானவர் அவர்களுக்கு ஆவியின் வரங்களின் அசாதாரணமான வல்லமைகளைக் கொடுத்தார் என்று நாம் எடுத்துக்கொள்வோம். அப்போஸ்தலனின் அலுவலானது, தலைமைத்துவ திறமைகள் இருந்த, கிறிஸ்தவர்களுக்கு தெய்வீக வரங்களின் பொறுப்பை சொல்லுவதும் சேர்ந்திருந்தது, மற்றும் கையை வைப்பது அந்த வெளிப்படையான சொல்லுதலின் ஒரு அடையாளமாக இருந்தது (அப். 8:14-17; காண்க 2 கொரி. 12:12). அவர்கள் விரும்பினபடியே, அந்த வரங்களை செயல் படுத்த அவர்களுக்கு முடிந்தபடியால், சில கிறிஸ்தவர்கள் அவர்கள் ஆதாயத்திற்காக அதை வெளிப்படையாகவே பயன்படுத்தினார்கள். பற்பல பாஷைகள் ஒரு விசேஷ அக்கறை கொண்டதாக இருந்தது.

கொரிந்தியர் தவிர, பவுல் தன்னுடைய நிரூபங்களில் வேறெங்கும், பற்பல பாஷைகளைக் குறித்து பேசவில்லை. அவைகள் அப்போஸ் தலருடைய நடபடிகைகளில் (2:4-8; 10:46; 19:6) மூன்று முறை சொல்லப்பட்டிருக்கிறது. பாஷைகளின் வரங்கள், வேறெந்த கிறிஸ்தவ மானியத்திலும் தோன்றுவதில்லை (ரோமர் 12:4-8; எபே. 4:11-13; 1 பேதுரு 4:10, 11). புதிய உடன்படிக்கையில் பற்பல பாஷைகள் அரிதாக இருக்கிறது. ஒரு சிலர் “பாஷையை” மறுவரையறை செய்து அந்த, வரத்தை உணர்ச்சி வசப்பட்டு உளருவதை, அவர்கள் அழைக்கபடுகிற “கவர்ந்திழுக்கும் வரம்” என்று அவர்கள் அழைப்பதுடன் ஒப்பிட விரும்புகிறார்கள். அவர்கள் பற்பல பாஷையை, இந்த நாளில் சமூக ஆராதனையில் இருக்கும் அனுபவத்தின் அளவின்படியே மாற்ற விரும்புகிறார்கள். இந்த வகையான பற்பல பாஷை பேசுதல், புதிய உடன் படிக்கையில் எந்த ஒரு வேதாந்த அஸ்திபாரமும் இல்லாமல் இருக்கிறது.

கொரிந்து சபையில் ஒரு சிலர், தாங்கள் சாதாரண முறையில் கல்லாத பாஷைகளை பேசும் தெய்வீக மானியத்தை பெற்றிருந்தார்கள். கிரேக்க - ரோம உலகில் அற்புத நிகழ்வுகள் என்பது மிக அரிதாக இருந்தது, ஆனால் பவுல், தன்னுடைய நடத்தை-யையும் மற்றும்

புறஜாதியார் சமுதாயத்திலிருந்த பழக்க வழக்கங்களை வித்தியாசப்படுத்துவதில் மிக ஜாக்கிரதையாக இருந்தார். அவருக்கு மற்றும் கிரேக்க சந்தையில் சாதாரணமாக தென்பட்ட, இடத்திற்கு இடம் செல்லும் தத்துவ ஞானிகளுக்கும் ஒரு சில ஒற்றுமைகள் இருந்திருந்தாலும், இந்த சாத்தான்களைப் போல இவருடைய சுபாவம் அல்ல என்று தெளிவுபடுத்தினார் (1 கொரி. 9:15; 2 கொரி. 12:13, 14; 1 தெச. 2:9). ஒரு வகையான உணரச்சி வசப்பட்ட, எந்திர முறையான, அர்த்தமற்ற உரையாடல் கிரேக்க வழிபாடுகளை சித்தரித்தது. ஒரு சிலர் அத்தகைய வழிபாடுகளை கொரிந்தியர் பேசும் பற்பலபாஷைக்கு ஒப்பாக வைத்திருந்தார்கள்.[2] கிரேக்க தீர்க்கதரிசனம் உரையாடலுக்கு பொதுவான களிப்பூட்டும் வார்த்தைகள் மற்றும், பற்பல பாஷைகளைப் பெற்றிருந்த கொரிந்தியர் பேசின வார்த்தைக்கும், வடிவத்தில் மற்றும் கிரியையில் வேறுபட்டது என்பதை பவுல் கண்டு கொண்டார்.

பற்பல பாஷைகளைப் பேசுவதற்கு நேர்மாறாக, கிரேக்க வார்த்தையான ἀγάπη (*agapē*, "அன்பு") சபையில் வளர்க்கப்பட்ட ஒரு கருத்தை மற்றும் முதலாம் நூற்றாண்டில் கிரேக்க - ரோம உலகத்தில் இணையில்லாததாய் குறித்துக்காட்டியது. மற்றவர் களின் நன்மைக்காக ஒருவர் மற்றவர்களின் ஸ்தானங்களை வகிக்கலாம் என்ற எண்ணத்தை மூடினது. கிறிஸ்தவர்கள், மற்றவர்களின் தகுதியை ஆராய்ந்து பாராமல் அல்லது பதிலுக்கு வேறொன்றும் பெறாமல், அன்பை கிருபையாக அளிக்கிறார்கள். அந்த அன்பின் மூலம் யார் அன்பை கொடுக்கிறார்களோ அவர்கள் உள்ளத்தில் காணப்படுகிறது, அந்த அன்பை பெற்றுக்கொள்ளும் நபரின் தகுதியில் அல்ல. தேவன் நமக்கு ஒரு இரட்சகரை அனுப்பிவைத்தது மற்றும் சிலுவையில் இயேசு காண்பித்த தரமான அன்பின் வகை இதுவே.

கொரிந்துவின் கிறிஸ்தவர்கள் பற்பலபாஷைகளை பேசுவதை மதிப்புமிக்க ஸ்தானத்திற்கு உயர்த்தி வைக்கையில், பவுல் மிக ஜாக்கிரதையாக அவர்கள் உயர்த்தினதை உரையாற்றினார். ஒருவர் "மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும்" (13:1), அன்பு இல்லை என்றால் அது ஒரு பிரயோஜனமில்லாத உளரலாக இருக்கும். அன்பானது, எல்லோரும் சாகுபடி செய்யும் ஒரு இயற்கை மானியமாக இருக்கிறது. "தூதர்பாஷைகளையும்" என்று பவுல் எந்த அர்த்தத்தில் சொன்னார் என்று தெரியாமல் இருக்கிறது, ஆனால், ஒருவர் கேட்க மிக அழகாக இருக்கும் என்ற சத்தத்தை எடுத்துரைக்கும் ஒரு வார்த்தையாகவே சொல்லியிருப்பார்.

அப்போஸ்தலர் 13:1-3ல் முதல் நபர் சுட்டு பெயரான "நான்" என்று பயன்படுத்தினார். தேவைப்படும்போது அவரும் பாஷையில் பேசினார்,[3] ஆனால், அந்த வரம், அன்பிற்கு அடிபணிந்ததாக இருக்கிறது என்று அவர் உணர்ந்து பேசினார்.

**வசனம் 1.** அன்பில்லாமல், பற்பல பாஷையை காட்டுவது என்பது

**சத்தமிடுகிற வெண்கலம்போல** இருக்கிறது. சபையில் ஐக்கியம், நல்லெண்ணம், மற்றும் சகோதர அன்பானது, கிறிஸ்தவர்கள் தேவனில் அன்புகூராமல் மற்றும் ஒருவரில் ஒருவர் அன்புகூராமல் போனால் ஆபத்தாக இருக்கிறது. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், Ignatius மற்றும் பலர் பழமொழி போன்ற சொல்லுதலை ஏற்றார்கள். அவர்கள் பலவகையில், சொன்னது, கிறிஸ்தவர்கள் மற்றும் அவர்களுடைய தலைவர்கள் வீணையிலுள்ள தந்திகளைப் போல ஒன்றாக செயல் படுகிறார்கள்.[4] ஒருவரின் தனிப்பட்ட மகிமைக்காக பயன்படுத்தப்பட்ட பற்பல பாஷைகள் பொருந்தாத சத்தத்தை மட்டுமே கொடுக்கும்.

"வெண்கலம்" என்று சொல்லப்பட்ட வார்த்தை χαλκός (*chalkos*), என்பதாகும். தெளிவாக சொன்னால், வெண்கலம் அல்லது பித்தளை. 146 கி.மு. வில் ரோமர்கள் கொரிந்துவை வென்றபின், கொரிந்தியர்கள் செய்த வெண்கலம் சித்திரக்கலைகள் ரோமர் நடுவில் விலை மதிக்கப்பட்டது. பட்டணம் கைபிடிக்கப்பட்டு இருநூறு ஆண்டுகளுக்கு பிறகு, பவுல் எபேசு-விலிருந்து ரோமர்கள், கொரிந்தியரின் வெண்கல சித்திரைக்கலைகளை பெறும்படி வாதாடினதை எழுது-வது கூடாத காரியமாக இருந்தது. தொடர்ந்து, அப்படிப்பட்ட உருவகம், அவருடைய அறிக்கைக்கு சிறிது அர்த்தத்தையும் சேர்த்திருக்கும். மிக சமீபமாக வந்த ஒரு தத்துவம், பவுலுக்கு தன்னுடைய மனதில் இருந்த, வெண்கலத் தினால் செய்யப்பட்ட, மற்றும் திரையரங்குகளில் ஒலியை பெருக்கம் செய்யும், ஒலியியல் பாண்டங்கள் இருந்திருக்கலாம்.[5] இந்த ஒருங்கிணைப்பு கூட சாத்தியமில்லாததாய் இருக்க-லாம், ஏனெனில் அப்போஸ்தலன் தன் மனதில் நேர்மறையான விளைவை வைத்திருக்கக் கூடும்: அன்பில்லாமல் பற்பல பாஷைகளைப் பேசுவது அதை கேட்பவர்களுக்கு, ஒலியியல் பாண்டங்கள் பார்வை-யாளர்களுக்கு கொடுத்த பிரயோஜனத்தையும் தர-வில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார். முடிவில், பாரம்பரியமான விவரணையே சிறந்ததாக இருக்கும்: பவுலின் "ஓசையிடும்" மணி என்பது எந்த இசை கிரியையும் இல்லாத, "சத்தமிடுகிற வெண்கல"த்திற்கு சமாந்தமாக இருந்த ஒரு உலோகமாக இருந்தது. ஒரு மணியை அடிக்கும்போது சத்தம் வந்தது, ஆனால் எந்த ஒரு பயனும் இல்லை; அதேபோல், தனிப்பட்ட மகிமைக்காக வெளிப்படுத்தப்-பட்ட பற்பல பாஷைகள் கிறிஸ்துவின் சரீரத்திற்கு எந்த ஒரு பயனும் தரவில்லை.

**வசனம் 2.** அன்பில்லாமல் வரங்களை செயல்-படுத்தின ஒருவன் ஒன்றும் இல்லை. இந்த அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களில் "ஆனாலும்" என்பது ஐந்து முறை கொடுக்கப்பட்டிருக்கிறது; பவுல் அனுமான வார்த்தையான "இருந்தாலும்" (ἐάν, *ean*). வியக்கத் தக்கதொன்றுமில்லாமல், அவர் முதலில் நிலவியிருந்த பிரச்சனையை கவனித்தார்: "நாம் ... பாஷைகளை பேசினாலும் ..." (13:1). அவர் பிறகு

தொடர்ந்து, **நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து ... சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் ...** அவர் சொன்னது, "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும் ..." கிறிஸ்துவை அறிந்தவர்களுக்கு இந்த எல்லா கிரியைகளும் உன்னத கனம்பெற்றதாய் இருந்தது; ஆனால், அன்பில்லாமல் இருந்தால் இவையெல்லாம் எந்த பிரயோஜனத்திற்கும் இல்லை என்று பவுல் சொன்னார். அன்பில்லாமல், கிறிஸ்தவர்கள் எதைச் செய்தாலும் கிறிஸ்துவை உயர்த்தக்கூடிய அல்லது அவருடைய இராஜ்ஜியத்தை கட்டக் கூடியதாக இருக்காது. பவுல் அதிக மென்மையான வழியையே நாடச் சொன்னார் (12:31), ஆனால் சகோதரர்கள் இந்த வரங்களையும் தங்கள் மனதில் வைத்திருக்கச் சொன்னார்.

தீர்க்கதரிசன வரமானது போதனைக்கு ஒன்றானதாக இருந்தது, ஆனால் தீர்க்கதரிசி தேவனிடத்திலிருந்து அதிகாரத்தோடு பேசினான். தேவன் தீர்க்கதரிசியுடைய வார்த்தையை வழி நடத்தினார் (காண்க 12:10). சபையைக் கட்டி எழுப்ப, பற்பல பாஷைகளை விட தீர்க்கதரிசனம் அதிகம் செயல்பட்டது, ஏனெனில் தீர்க்கதரிசனம் உரைத்தவர், "மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாக" பேசினார்கள் (14:3). அந்நிய பாஷையில் கொடுக்கப்பட்ட செய்தி அதை வியாக்கியானம் செய்யாமல் அர்த்தமில்லாததாய் இருக்கும்; ஆனால் தேவனிடத்திலிருந்த பெரிய சத்தியங்களை, அவர் புரிந்து கொள்ளும்படி சொல்லவே தீர்க்கதரிசி அழைக்கப்பட்டான். அத்தகைய தலைவரிடம் வழி நடத்துதல் "மற்றவர்களை பலப்படுத்துகிறது, ஊக்குவிக்கிறது மற்றும் ஆறுதல் படுத்துகிறது" (NLT).

தீர்க்கதரிசனத்திலிருந்து, அப்போஸ்தலன் சகல **இரகசியங்களை** (μυστήρια, *mustēria*) அறிந்து கொள்ளு-வதற்கு திரும்பினார். ஆன்மீக கிரேக்க உலகில் இது ஒரு முக்கியமான வார்த்தையாக இருந்தது. இந்த தேவர்களின் ஆழமான காரியங்களை தொடங்கும், Dionysus மற்றும் Demeterவின் பக்தர்களுக்கு, கால காலமாக இரகசிய சடங்குகள் இருந்தது. இரகசிய சடங்குகள், மேற்கத்திய சடங்குகளுக்கு அதாவது, கிரேக்க உலகில், சமீப காலமாக அறிமுகமான Isis and Cybele, பக்தர்களுக்கு மிக முக்கியமாக இருந்தது. கிறிஸ்துவுக்குள் இரகசியங்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது (எபே. 3:4-6, 9). இருப்பினும், எல்லா இரகசியங்களின் அறிவு புறஜாதியார், யூதர், அல்லது கிறிஸ்தவரின் அன்பின் வழி நடத்தும் கரம் இல்லா - மல் ஒன்றும் இல்லை.

**அறிவு**, பவுலின் இதயத்தின் அருகாமையில் இருந்தது. "[அவர்] அந்நியபாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப்" பேசுகிறதிலும், "தன் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே" அவருக்கு

அதிக விருப்பமாயிருக்கும் என்று பவுல் சொன்னார் (1 கொரி. 14:19). அவருடைய சிந்தையில் மற்றும் இருதயத்தில், கிறிஸ்தவ விசுவாசமானது, அறிவில் நிலைத்திருக்கிறது; ஆனால் கர்த்தரில் மற்றும் தம் ஜனங்களில் அன்பில்லாத ஒரு அறிவு மட்டுமே, ஒன்றுமில்லாததாய் இருக்கிறது. ஒரு கிறிஸ்தவனுக்கு விசுவாசத்தை விட வேறொன்றும் முக்கியமானது அல்ல. விசுவாசம் ஒரு செங்குத்தான கருத்தாக இருக்கிறது; அது ஒரு விசுவாசியின், தேவன் பேரிலான நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை உள்ளடக்குகிறது. தேவன் பேரில் விசுவாசமானது நினைக்க முடியாத காரியங்களைச் செய்து முடிக்கிறது என்று சொல்ல இயேசு அடையாள அர்த்தமுள்ள பாஷையை பயன்படுத்தினார் (மத். 21:21). அன்பில்லாமல் அறிவை அல்லது விசுவாசத்தைப் பெறுவது கிறிஸ்துவில் வாழும் வாழ்க்கையைப் பரிகாசம் செய்வதாகும்.

**வசனம் 3.** வரங்களைச் செயல்படுத்துபவருக்கு அன்பில்லாமல் போனால், மென்மையாக மதிபிடப்-பட்ட அற்புத வரங்களான - பற்பலபாஷகள், தீர்க்கதரி-சனம், அறிவு, மற்றும் விசுவாசமும் கூட மதிப்பில் - லாததாய் இருக்கும். ஒருவருக்கு மிக அதிகமான படியில் இந்த வரங்கள் செயல்பட்டாலும், அவருக்கு அன்பில்லாமல் இருந்தால் அது ஒன்றுமேயில்லை. ஒரு வகையான அறிவானது போட்டிக்கு நடத்தி சரீரத்தின் ஐக்கியத்தை பாழாக்குவதாக இருக்கிறது. ஒரு உள்ளார்ந்த தீர்க்கதரிசி ஒரு அக்கறையில்லாத, அன்பில்லாத முறையில் சத்தியத்தைப் பேசலாம். அவனுக்கு வசனத்தின் அறிவு ஆழமாக இருக்கலாம் மற்றும் எல்லா இரகசியங்களையும் புரிந்துகொள்ள-லாம்; ஆனாலும், அவன் அன்பின் இருதயத்திலிருந்து பேசத் தவறினால், அவனுடைய முயற்சிகளின் முடிவு படுதோல்வியாகத்தான் இருக்கும்.

இயேசு தமது சீஷர்களுக்கு, கடுகுவிதையளவு விசுவாசம் இருந்தால், அவர்கள் மலையை அவ்-விடத்திலிருந்து போக்க முடியும் என்று சொன்னார் (மத். 17:20). அன்பில்லாமல், உயர்ந்த விசுவாசமும் மதிப்பில்லாதது. John Stott சொன்னது: "அன்பானது தேவனுடைய ஜனங்களின் பிரதானமான, மிக உயர்ந்த, ஒப்புயர்வற்ற, தனிப்பட்ட குணாதிசயமாக இருக்கிறது. ஒன்றுமே அதை இடம்பெயர்க்கவோ அல்லது பதிலாக வைக்கவோ முடியாது. அன்பே பிரதானம்."[6] கொரந்தியரின் பழக்கம், அவர்களுடைய உபதேசமாக இல்லாதிருந்தாலும், அற்புத வரங்கள் அன்பை அதன் இடத்தில் இருந்து தள்ளியிருந்தது.

அன்பில்லாமல், ஆவியின் வரங்கள் இலாபமற்றதாக இருக்கும். பவுலின் பாரம் அன்பு எப்படியாக இருக்கிறதோ, அதை விவரித்து, அன்பினால் ஏவப்பட்டவர்கள் எப்படியாக நடந்து கொள்ள வேண்டும் என்று கவருவது அல்ல. அன்பும் மற்றும் விசுவாசமும்

பலனாகாததிலிருந்து, ஸ்தூலமானதாக மாறும் வரை அது கிறிஸ்துவின் சாயலாகாது. அந்த காரணத்திற்காக, அப்போஸ்தலனின் சிந்தை அன்பின் விஷயத்திலிருந்து, அன்பை ஈர்க்க ஏவும் ஒரு சில வகையான தனிப்பட்ட தியாகத்தின் பக்கம் திருப்பினார். உதாரணத்திற்கு, ஒருவர், பெருமை, அகந்தை அல்லது புகழுக்காக - ஒரு பெரும் தொகையைக் கொடுக்க அல்லது உயர்ந்த தியாகத்தைச் செய்ய அவருடைய உயிரை கொடுக்கவும் - ஊக்கமடையலாம். ஒருவர் எந்த வகையின் தனிப்பட்ட இடர்ப்பாடுகளை சந்தித்தாலும், அதை சக ஜனங்கள் மீதான அன்பினாலே அல்லது தேவ அன்பினாலே செய்யாமல் போனால், அது மதிப்பில்லாததாய் இருக்கும் என்று பவுல் சொன்னார். கிறிஸ்துவுக்குள், ஒருவர் செய்வது மட்டுமே முக்கியமல்ல, ஆனால் இருதயத்திலிருந்து வெளிப்படும் கிரியைகளும் முக்கியமானதாக இருக்கிறது.

13:3ன் கிரேக்க மொழி பெயர்ப்பிலிருந்து இரண்டு கேள்விகள் உதிக்கிறது. முதலாவது, முதல் முறை-யாக புதிய ஏற்பாட்டில் இந்த பகுதியில் மற்றும் ரோமர் 12:20 மட்டுமே தோன்றும். ψωμίζω (*psōmizō*, “உணவளிப்பது”) இந்த வினைச்சொல்லைச் சொல்லும் சிறந்தவழி. இது ஒருவகையான கொடுத்தல், விசேஷமாக, பசித்தவர்களுக்கு “உணவைகொடுப்பது” அல்லது “ஒரு துண்டு ரொட்டி கொடுப்பதை” குறிக்கிறது. “ரொட்டி”க்கு நவீன கிரேக்க வார்த்தை ψωμί (*psōmi*). NASB, கொடுப்பது என்பது **ஏழைகளுக்கு உணவு** கொடுப்பது என்ற ஒரு முக்கியமான சித்தாந்தத்தைப் பிடிக்கிறது.

இரண்டாவது கேள்வியானது, 1 கொரிந்தியரின் கிரேக்க பிரதிகள் குறித்த எண்ணம். மொழி பெயர்ப்பால், கிரேக்க வார்த்தைக்கு இருக்கும் அதே நுட்பத்தை ஆங்கிலத்தில் கண்டு பிடிப்பது ஒரு பெரிய சவாலாக இருக்கிறது; மற்றொன்று பழங்கால கிரேக்க கையெழுத்துப் பிரதிகள் (கையால் எழுதின பிரதிகள்) வித்தியாசமாக எழுதப்பட்டிருக்கும். ஆங்கில மொழி பெயர்ப் பாளர்கள், **என்சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும்** என்ற உட்கூறைக் கொடுப்பதில் ஏகசிந்தயாகவே இருக்கிறார்கள்; ஆகிலும், குறிப்பிட்ட சாட்சியானது வேறுபட்ட ஒரு அர்த்தத்தைக் கொடுக்கிறது. சிறந்ததாக மதிக்கத்தக்க பழங்கால பிரதிகள், καυθήσομαι (*kauthēsomai*, வருங்கால செயலற்ற சுட்டிக்காட்டும் அர்த்தமான “சுட்டெரிக்கப்படுவதற்கு”) என்று அல்லது καυθήσωμαι, *kauthēsōmai*, செயலற்ற நிபந்தனையின் அடிப்படை அர்த்தத்தைக் கொடுக்கும் “சுட்டெரிக்கப்படுவதற்கு”[7] என்பதற்குப் பதிலாக καυχήσωμαι (*kauchēsōmai*) என்றும் “தன்னில்தான் பெருமை கொள்ளுவது அல்லது மகிமைப்படுத்துவது” என்று அர்த்தத்தை கொடுக்கிறது. சொல்லின் எழுத்துக் கூட்டுதலில் இந்த வார்த்தைகள் ஒன்றுக்கொன்று மிக நெருங்கியதாக இருக்கிறது. பழங்கால எழுத்தாளர் ஒருவர், தனக்கு முன் வேறு ஒரு வார்த்தை

இருக்கையில், தற்செயலாக வேறொரு வார்த்தையை நகலெடுத்திருக்கலாம். ஒரு எழுத்தாளன் அனேகமாக, ஒன்றை எதிர்பார்த்து தவறான ஒரு வாசகத்தை, அது புரிந்துகொள்ள கடினமாக இருக்கக்கூடாது மற்றும் எழுத்திற்கு எளிதாக இருக்கும் என்று நினைத்து நகலெடுத்திருக்கலாம் என்று பொதுவாக எழுத்து வடிவ எழுத்தாளர்கள் நினைக்கிறார்கள். ஆதலால், அவர்கள் மிக கடினமான வாசகத்தை அசல் என்று எடுத்துக் கொள்கிறார்கள். இந்த ஒரு விஷயத்தில், மிக கடினமான மற்றும் மிக நம்பகமான வாசகம் "பெருமைபாராட்டுவது." என்று அர்த்தமாகிறது. பவுல், இந்த நிருபத்தை எழுதும்போது kauchēsōmai என்ற வினைச்சொல்லை பயன்படுத்தியிருந்தால், அதைவிட சிறந்த மொழிபெயர்ப்பு "... நான் பெருமைபாராட்ட என்னுடைய சரீரத்தை ஒப்புக்கொடுத்தால்" என்று இருக்கும். அதிர்ஷ்டவசமாக, இரண்டு வாசகங்களின் வித்தியாசங்களும், அர்த்தத்தில் ஒரு சின்ன வித்தியாசத்தை மட்டுமே தருகிறது.

## அன்பின் குணாதிசயங்கள் (13:4-7)

**4அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, 5அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, 6அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். 7சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.**

1874ல், Henry Drummond, அவருடைய வழக்கமான பிரசங்கத்தில், பவுலின் அன்பைக் குறித்த வர்ணனையை ஒரு பட்டகத்திலிருந்த ஒளி பிரகாசித்துக்கொண்டு கூறு கூறாக உடைந்திருப்பதற்கு ஒப்பிட்டார். Drummond இவ்வாறாக எழுதினார்,

> ஒரு விஞ்ஞானி ஒளிக்கற்றை எடுத்து ஒரு படிகக்கல் பட்டகத்திற்குள் விடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள், அது பட்டகத்தின் மறுபக்கத்தில் சிறு கூறாக உடைக்கப்பட்டு வெவ்வேறு வண்ணங்களில் வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் - சிகப்பு, நீலம், மஞ்சள், ஊதா, ஆரஞ்சு மற்றும் வானவில்லின் எல்லா வண்ணங்களும் ஆதலால் பவுல், அன்பு என்னும் இந்த காரியத்தை, அவனுடைய ஏவப்பட்ட அறிவின் அற்புதமான பட்டகத்திற்குள் நுழையச் செய்கிறான், மற்றும் அது வேறு பக்கத்திலிருந்து உடைந்த கூறுகளாக வெளியே வருகிறது.[8]

"அன்பானது" எவ்வளவு ஒரு ஜொலிக்கும் சாராம்-சமாக, அதிக பயன்படுத்தப்பட்ட மற்றும் எல்லாவற்றி-லும் சேர்த்துக் கொள்ளப்பட்ட வார்த்தையாகியிருக்கிறது என்றால், அது ஆங்கிலம் பேசும் நாடுகளில்

அதனுடைய அர்த்தத்தையே இழந்திருக்கிறது. இன்னும் எந்த ஒரு வல்லமையும் அல்லது இரகசியமும் இல்லாமல் இருக்கிறது. சரியான நேர்மையோடு, ஜனங்கள் அவர்களின் விருப்பப்பட்ட உணவிலிருந்து மற்றும் பொழுது போக்கு, அவர்களுடைய தேசம் மற்றும் தாய்மார்கள் வரைக்கும் அன்பு கூறுவதாக சொல்லுகிறார்கள். அதே வார்த்தையை அவர்களுடைய சிறுவயது நண்பர்களை மற்றும் பிரிசித்திப் பெற்ற இதயத் துடிப்புகளிடம் தங்கள் உணர்வுகளை விவரிக்க இதே வார்த்தையை பயன்படுத்துகிறார்கள். விளம்பரதாரர்கள் கார், மருந்து மாத்திரை கள், மற்றும் உடைகளோடு கூட இந்த "அன்பை" சேர்க்கிறார்கள். அது எல்லாமே என்று அர்த்தமாகும்; ஆதலால் அது ஒன்றுமே இல்லை என்று அர்த்தப்படுகிறது.

மேற்கத்திய நாடுகளில், "அன்பு" என்னும் இந்த வார்த்தையின் சரிவானது, முதல் நூற்றாண்டின் கிரேக்க-ரோம உலகத்தில் ágape என்ற வார்த்தையைத் தேர்ந்தெடுப்பது முக்கியமாக கிறிஸ்தவர்களுக்கு எதிராக இருக்கிறது. "நம்பிக்கை" (πίστις, *pistis*), "கிருபை" (χάρις, *charis*), மற்றும் "விசுவாசம்" (ἐλπίς, *elpis*), என்பவைகளை புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், அவர்களைச் சுற்றியிருந்த பொதுவான உலகச் சொல்லகராதியிலிருந்து இந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்தார்கள். தேவைப்பட்டபோது அவைகள் சீராக்கப்பட்டு மறுபடியும் மாசற்றதாக்கப்பட்டது; ஆனால், அதே சுற்றுபுறத்தில், *ágape* என்பது பொதுவானதாக இருக்கவில்லை. இயேசு மற்றும் அவருடைய சீஷர்களால், மிக குறைவாக பயன்படுத்தப்பட்ட இந்த வார்த்தையை, மனித மற்றும் தெய்வீக உறவுகளில் புதியதோர் எண்ணத்தை அறிமுகப்படுத்த தனித்து விட்டார்கள். அவர்களுடைய சமகாலத்தவர்கள், கொடுத்த அந்த வார்த்தையின் புது அர்த்தத்தைக் கண்டுபிடித்து, புதிய அர்த்தத்தை கொடுப்பது, அப்போஸ்தலரின் நோக்கமாக இருந்ததில்லை. பவுல், உன்னதத்திலிருந்து வந்த வழிநடத்துதலினால், கிறிஸ்துவை பின்பற்ற தைரியம் கொண்டவர்களுக்கு கிறிஸ்தவ அன்பை விவரிக்க முற்பட்டார்.

**வசனம் 4.** அப்போஸ்தலர் நமக்குக் கொடுத்த பட்டியல் நல்லொழுக்கமாக இருக்கிறது, உணர்ச்சி பூர்வமானதாக இல்லை.[9] இரண்டு நிலையானதாக மற்றும் மூன்று எதிர்மறையாக, அவர் அன்பின் கூறு பாகங்களை ஆராய ஆரம்பித்தார்.

**அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது.** மற்றவர்களுடைய இடத்தில் தன்னை வைக்க முயற்சி செய்வது என்பது, ஒரு சகோதரன் அல்லது ஒரு அயலானின் பலவீனத்தில் பாடுபடுவது ஆகும். ஒருவரின் குறைபாடுகளை மற்றும் தவறுகளை நினைத்து, ஒருவர் மன்னிக்கப்பட எப்படி விரும்புகிறார்கள் அவ்வாறு அவர்களை மன்னிப்பது ஆகும். சுருக்கமாக, அன்பு தயவை உட்கொண்டு தழுவுகிறது. தேவன் தயை உள்ளவரானபடியால், அவர் தம்முடைய நெறிமுறை உலகின்

அமைப்பில் தயவை கட்டியிருக்கிறார். கிறிஸ்தவ அன்பு மற்றும் தயவு, சிருஷ்டிகரின் சுபாவத்தை பிரதிபலிக்கிறது.

அன்புக்குப் **பொறாமையில்லை.** பொறாமை என்ற குறிப்பீடு, மிக பிரசித்தமான ஆவியின் அற்புத வரங்களுக்காக - உதாரணமாக, பற்பல பாஷைகளைப் பேசுவது, வியாதியஸ்தரைக் குணமாக்குவது, அல்லது தீர்க்கதரிசனம் - கொரிந்தியர் நடுவில் இருந்த போட்டிக்கு ஒரு உருவகமாக கொடுத்திருக்கலாம்.

அன்பு **தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.** அற்புத வரமானது அவ்வப்போது அகந்தை மற்றும் தன்னை பெரியனாக பாசாங்கு காட்டுவதில் நடத்தியிருந்தது. கொரிந்துவில், இந்த போட்டியிடும் குணமானது ஒரு விசுவாசிக்கு எதிராக மற்ற விசுவாசியின் எதிர்ப்பாக உருவெடுத்திருந்தது. அப்போஸ்தலனின் அன்பு என்னும் ஆய்வு, கிறிஸ்தவர்கள் தங்களின் பழைய சுய வழிகளை கிழித்தெறிய வேண்டும் மற்றும் அன்பின் வழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெளிவுப்படுத்தியது. அன்புகூரும் ஒருவன், எப்பொழுதுமே தன்னைப் பற்றி பேசிக்கொண்டு அல்லது அவன் எப்பேர்ப்பட்டவன் அல்லது அவன் என்ன சாதித்திருக்கிறான் என்று தன்னிலே ஈர்க்கப்பட்டிருக்கமாட்டான்.

அன்பை ஒரு மனிதனின் சொந்த நிகழ்ச்சி நிரலில் சுலபமாக தனதாக்கிக்கொள்ளலாம் என்று புற ஜாதியாருக்கான அப்போஸ்தலர் நன்றாகவே அறிந்திருந்தார். அது எல்லா வகையான பிரிவினை மற்றும் நல்லொழுக்கமற்ற நடத்தைக்கு நியாயப் படுத்துதலுக்கு பயன்படுத்தலாம். தொடர்ந்து பிரதிப-லிப்பு மற்றும் விவரணை இல்லாமல், மனித நடத்தையில், அதாவது அவனுடைய விபச்சாரத்திலிருந்து மிரட்டி பணம் வாங்குவது வரைக்கும், எல்லாவற்றையும் நியாயப்படுத்த அன்பு பயன்படும். James D. G. Dunnன் படி,

> … அன்பு ஒன்றே … தனிப்பட்ட முன்னேற்றத்தின் நிகழ்ச்சி நிரலை மறைக்கும் பாசாங்கின் அங்கியாகும், கவர்ந்திழுக்கும் அதிகாரத்திற்கு ஒரு இறுக்கமான கூற்றைப் போல ஒரு சூழ்ச்சியான கூற்றிற்கு ஒரு பகட்டான பாசாங்காக இருக்கிறது.[10]

**வசனம் 5.** அன்பு **அயோக்கியமானதைச் செய்யாது; தற்பொழிவை நாடாது.** கிறிஸ்து தமது ஜனத்திலிருந்து எதிர்பார்க்கும் வாழ்க்கை முறையில் "அன்பின்" உண்மை அர்த்தத்தை பவுல் தொடர்ந்து உட்புகுத்தினார். புரிந்துகொள்ள ஏதுவாக இருக்க, அவர் வேறுபடுத்துவதற்கு திரும்பினார். அன்பு கிறிஸ்துவல்லாத முறையில் நடந்து கொள்ளாது. சுய சேவையின் நோக்கத்தின் உந்துதலால், ஒருவர், தேவனுடைய ஜனங்கள் வெறுக்கத்தக்கதாக பார்க்கும் நடத்தையை, அன்பு நியாயப்படுத்துவதாக எடுக்கலாம். சிலர்

மற்றவர்களுக்கு செய்யும் காரியங்களை மற்றும் அன்பை ஒருவரும் குழப்பிக்கொள்ளக் கூடாது என்று பவுல் சொன்னார். மற்றவர்கள் மேல் வீசப்பட்ட வெட்கக்கேடான தூஷணங்கள், முரட்டுத்தனமான வார்த்தைகள், மற்றவர்களில் கெட்டதையே பார்ப்பது, ஒருவரின் ஆதாயத்தை எதிர்ப்பார்ப்பது; அத்தகைய நடத்தைக்கு கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்த பங்கும் இல்லை.

அன்பு **சினமடையாது.** παροξύνω (*paroxunō*, "சினமடைவது") என்ற வார்த்தை நண்பர்களுக்குள் சண்டையை கிளறிவிடுவது என்று அறிவுறுத்துகிறது. ὀξύνω (*oxunō*, "கூர்மையாக்குவது") வின் கலவையாக இருக்கிறது. அன்பு "சீக்கிரத்தில் கோபம்கொள்ளாது" (NIV) என்று சொல்ல பவுல் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார். ஜனங்களை சுரண்டல்களால் அதன் பிறகு கோபத்தை தூண்டிவிடும் கீழ்த்தரமான ஆவியை இங்கு கலவை வினையானது அறி வுறுத்துகிறது. சண்டையை உருவாக்குவதில் அன்பு சந்தோஷப்படாது. விவாதத்தில் சந்தோஷப்பட்டு திருப்தி அடையும்படி, "சத்தியத்தை காக்கும்" காரியத்திற்கு பின்னால் ஒருவர் ஒளிந்துக் கொண்டால், அவர் அன்பைக் குறித்து அதிகம் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கும்.

அன்பு **தீங்கு நினையாது**. அன்புகூரும் ஒரு கிறிஸ்தவன் நீடிய பொறுமையுள்ளவனாக இருப்பான், தான் தவறு என்று நினைப்பதை ஒருவர் செய்யும் போது கூட சுலபமாக எரிச்சலடைய மாட்டான். அன்பானது மற்றவர்களிடம் மென்மையாக நடந்துக் கொள்ளும், தேவைப்பட்டால், பலவீனர்களை அறிவோடு சரிப்படுத்தும். அன்பானது, தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டாலும் கூட, எந்த தீங்கையும் குறித்து வைக்காது. மற்றவர்களின் தகுகியின் ஆதாரத்தில் ஒருவர் அன்புகூருவதில்லை, ஆனால் அவனுடைய கிறிஸ்தவ இருதயத்தில் விதிக்கப்பட்ட அணுகுமுறையின் ஆதாரத்தோடு அன்புகூருகிறது. அன்புகூருவது என்பது கிறிஸ்துவின் சாயலில் ஜீவிப்பதாகும்.

**வசனம் 6.** அன்பு **அநியாயத்தில் சந்தோஷப்படாது**. ஒருவர் அன்புகூர்ந்தால், மற்றவர்கள் செய்த அல்லது அவர்களுக்கே செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டுவதில் சந்தோஷப்படாது. மற்றவர்கள் செய்தது அல்லது சொன்னதைக் குறித்து, அதிர்ச்சி அடைவது போல நடிப்பது, ஒரு வகையான சுயநீதியின் கோபத்திலிருந்து வருகிறது. அத்தகைய ஆவியானது ஒரு நபரை அவனுடைய பெருமையில், அவன் திளைக்கும் திருப்தியை அளிக்கிறது.

அன்பு **சத்தியத்தில் சந்தோஷப்படும்**. அன்பானது நீதி மற்றும் நற்குணத்தில் சந்தோஷப்படுகிறது. ஒரு கிறிஸ்தவ தகுதியின் உணர்வானது கிறிஸ்துவில் தொடர்ந்து வளருவதின் மூலமாக வருகிறது, மற்றவர்களிடத்தில் தீங்கைக் காண்பதில் அல்ல. அன்பு கூருகிறவன் சத்தியத்தை தேடுகிறான். சத்தியத்தை தேடுவது

அநீதியின் அறிவினிடத்திற்கு கொண்டு செல்லுமேயானால், சத்தியத்திற்காக நிற்கும் ஒரு தருணம் அதுவாக இருக்கும், புறங்கூறி அல்லது தனிப்பட்ட இலாபத்தை தேடுவது அல்ல.

பவுல், அவர் சொன்னதின் பேரில் மட்டுமே, அன்பை விவரிக்கவில்லை, ஆனால், அவருடைய நாட்களில் பிரசித்தியாக இருந்த ஒரு சில விவரணை-களையும் அவர் வேண்டுமென்றே தவிர்த்தார். உதாரணமாக, பவுலுக்கு சமகாலத்தவர்களான, ஒழுக்க வியல்வாதிகள் நடுவில், அதிகம் மதிக்கப்பட்டமான சீக அல்லது உணர்ச்சிப்பூர்வமான நிலை εὐδαιμονία (*eudaimonia*, "சுகத்தோடு இருப்பது, சந்தோஷம்"), இதுவாக இருந்தது. பவுல் கிட்டத்தட்ட இந்த எண்ணத்தை புறக்கணித்தார். அப்போஸ்தலருக்கு, கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய உறவில் வளரும் சந்தோஷம், தனக்குள் திருப்தியான ஒரு உணர்வு மற்றும் சமாதானம், ஒருவருக்கு புறம்பான சூழ்நிலைகள் கொடுக்கும் பரவச சந் தோஷத்தை விட மிக அதிக மதிப்புள்ளதாக இருந்தது.

**வசனம் 7.** அன்பு **சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.** இன்னும் நான்கு நல்ல நிலைகளை சேர்த்து, பவுல் தன்னுடைய வாசகர்-களுக்கு அன்பு "தாங்கும்," "விசுவாசிக்கும்," "நம்பும்," மற்றும் "சகிக்கும்" என்று சொன்னார். அன்புகூரும் ஒருவர், மற்றவர்களின் தனிப்பட்ட தவறுகள் மற்றும் தப்பிதங்களை உள்ளத்தில் பார்க்கிறான் (காண்க 1 பேதுரு 4:8). அன்பானது, ஐய நிலை நலன் அளிக்க ஆவலாய் இருக்கிறது. கொலை செய்கிறவர்கள், பொய் பேசுகிறவர்கள், அல்லது களவு செய்கிறவர்கள் மட்டுமே இந்த உலகத்தில் பாவிகள் அல்ல என்று உணர்ச்சிமிக்க பார்வை யாளர்கள் கண்டுபிடிக்-கிறார்கள். நேசிக்கப்பட்டு மற்றும் மதிப்பிற்குரிய ஒரு சிலரும் கூட சில சமயங்களில் அற்பமாக, கசப்பு நிறைந்தவராய், அல்லது சுய சேவைபுரியும் எண்ணத்தில் போராடுகிறார்கள். மற்றவர்களுடைய குற்றத்தில் மென்மையாக இருக்க அன்பானது கிறிஸ்தவர்களை அழைக்கிறது. சரியான தேர்வு செய்யாத ஒரு சில ஜனங்களிடம் உயர்ந்த மற்றும் தாராளமான குணாதிசயங்கள் காணப்படுகிறது. இவைகள் எல்லாவற்றின் அர்த்தமும், அன்பு, தவறுகளை கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும் என்றல்ல. கிறிஸ்தவர்கள் பாவத்தை விட்டு விலகி நன்மை செய்ய கற்றுக் கொள்ளுவார்கள், ஆனால், மனித இருதயத்தில் இருக்கும் எல்லா பாவத்தின் போக்கையும் கிறிஸ்துவில் ஞானஸ்நானம், சிலுவையில் அறையாது. சகோதரர்கள், அவர்கள் நேசிக்கும் மற்றும் மதிக்கும் சிலர் பிரிய மில்லாத தேர்வுகளை செய்யும்பொது, தடுமாறக்கூடாது. கர்த்தருடைய சபையின் அங்கத்தினர் ஒருவரையொருவர் தேவைப்பட்டபடி திருத்த வேண்டும்; அப்படிச் செய்யத் தவறுவது கோழைத்தனமாக இருக்கும். பவுல், தான்

நேசிப்பவர்களை கடிந்து கொள்ளுதல் மற்றும் சீர்த்திருத்துவதில் அக்கறை கொள்ளுவது மற்றும் விசாரிப்பதன் பகுதியாகப் பார்த்தார்.

ஒரு கிறிஸ்தவன் அலட்சியம் அல்லது கொடுமை அல்லது நேர்மையின்மையை எதிர்த்து நின்றால், அன்பின் வேண்டுகோள்கள், அவனை கனிவாக நடக்க சொல்லும் மற்றும் பட்சாதாபப்பட வைக்கும். யூதாவின் மறக்கப்பட்ட நிருபம் இவ்வாறாக சொல்லுகிறது, “சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து, மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்” (யூதா 22, 23). அன்பின் முதலாவது சாய்வானது, ஒரு சகோதரனை நம்புவது, அவன் சொல்லுவது உண்மை என்று எண்ணுவது மற்றும், அவனில் சிறந்ததை தேடுவதே ஆகும். ஒரு தவறைக் குறித்து ஒரு சகோதரனை கடிந்து கொள்ளும் போது, அந்த கடிந்து கொள்ளுதலானது தன்னை உயர்வாக நினைத்துக் கொள்ளுவதற்காக அல்ல.

## அன்பின் நீடித்திருக்கும் நிலை (13:8-12)

**8அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்து போம். 9நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்க-தரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. 10நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போம். 11நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப் போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்து விட்டேன். 12இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப் பட்டிருக்கிற படியே, அறிந்துகொள்ளுவேன்.**

தெய்வீக வரங்களை விட அன்பு சிறந்தது என்று பவுல் வாதாடினார். அதாவது, அன்பானது “அதிக மேன்மையான வழி” (12:31). உண்மைதான், தெய்வீகமாக கொடுக்கப்பட்ட வரம் அன்பைத்தடுக்க வேண்டியதில்லை; ஒரே நபரில் இரண்டுமே இருக்க வேண்டும். ஆகிலும், கொரிந்துவில், அசாதாரண-மான ஆவிக்குரிய வரங்கள் நாடப்பட்டு, அது செயல்பட்ட முறையில் அன்பு வெளிப்படவில்லை. அன்பின் விலைமதிப்பை வாதாடி, அப்போஸ்தலர், கொரிந்து விசுவாசிகளில் அனுபவித்திருந்த அற்புத வரங்களை விட அன்பு எப்படி சிறந்தது என்று ஏன் நம்ப வேண்டும் என்று வேறு காரணங்களுக்கு திரும்பினார். அன்பானது

கிறிஸ்தவனுக்கு மத்திய தகுதியாக இருந்தது; ஒப்பிட்டு பார்க்கையில், பற்பலபாஷைகள், குணப்படுத்துதல், அறிவு, மற்றும் தீர்க்கதரிசனமானது, இயேசுவின் வாழ்க்கையை குறித்து போதிக்க பயன்படுத்தப்பட்ட தற்காலிக வரமாக இருந்தது. அன்பு என்றும் ஒழியாதது, ஆனால் அற்புத வரங்கள் ஒழிந்து போகும்.

**வசனம் 8.** அன்பு **ஒருக்காலும் ஒழியாது** (οὐδέποτε πίπτει, *oudepote piptei* என்றால், "ஒழியாது") என்று சொல்லும்போது, அப்போஸ்தலர், மாறாத அன்பின் நித்தியத்துவத்தை வலியுறுத்தினார். நாம் இதே முதலாம் நூற்றாண்டின் தற்காலிக வகையான வெளிப்பாட்டின் அற்புதங்களைப் பார்க்கிறோம்.

கொரிந்துவில் கிறிஸ்தவர்கள் நேராக பெற்றிருந்த மூன்று குறிப்பிட்ட வெளிப்பாட்டின் ஆவியின் வரங்களான: தீர்க்கதரிசனம், பாஷைகள் மற்றும் அறிவை உணர்த்தும் வசனம், இவைகளுக்கு அன்பை வேறுபடுத்தினார். இவைகளில் இரண்டு, தீர்க்கதரிசனம் மற்றும் அறிவு, ஒழிந்து போகும் (καταργηθήσεται, *katargēthēsetai*க்கு எதிர் செயலற்ற வார்த்தை καταργέω, *katargeō* என்பது, "செல்லத்தகாததாகச் செய்வது, ரத்து செய்வது") என்று அவர் சொன்னார். கூடுதலாக, அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம் (παύσονται, *pausontai*, παύω, *pauō*வின் எதிர்கால நடுநிலை). அவர் அறிவு மற்றும் தீர்க்கதரிசனத்தைக் குறித்து என்ன சொன்னாரோ அதையே பற்பல பாஷகளுக்கும் சொன்னார். இந்த எல்லா சந்தர்ப்பங்களில், இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற மூன்று அற்புத வரங்களின் தற்காலிக தன்மையானது அன்பின் நித்தியத்திற்கு எதிராக இருக்கிறது.

அன்பை கொடுப்பவருக்கு அல்லது அன்பை பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு அன்பு என்றும் ஏமாற்றாது. தேர்வு செய்து கொடுக்கப்பட்டிருக்கும் அற்புத வரங்களைப் போலல்லாமல், அன்பு எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. அதற்கு ஆவியின் எந்த ஒரு தெய்வீக பகிர்ந்தலும் தேவை இல்லை. அன்பைக் கொண்டிருப்பது, ஆவியின் எந்த விரும்பத்தக்க வரங்களைக் கொண்டிருப்பதை விட மிக முக்கியமானதாக இருக்கிறது. ஏனெனில் கிறிஸ்தவ நல்லொழுக்கம் மற்றும் நெறிமுறைகள், கட்டப்பட்ட ஒரு அஸ்திபாரமாக இருக்கிறது. அன்பில்லாமல் ஆவியின் வரங்கள் அர்த்தமில்லாததாய் இருக்கும். ஒருவர் அன்பின் தேவைகளை தவறாக புரிந்துக் கொள்ளலாம் அல்லது சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதை தவறாக செயல்படுத்தலாம், ஆனால் சபையின் வாழ்விற்கு அன்பே பிரதானமானது. பவுல் தீர்க்கதரிசனத்தை அல்லது பற்பல பாஷைகளை அல்லது அறிவை அர்த்தமற்றதாகச் செய்யவில்லை, அவர் தன்னுடைய வாசகர்களுக்கு அதை "நாடும்படி" சொன்னார் (12:31). ஆகிலும், கொரிந்தியர், இராஜ்ஜியத்தின் ஜனங்களாக மாற

தப்பான வழிகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள் என்று அவர் சொல்லிக்கொண்டிருந்தார். சபையின் ஆவிக்குரிய சிந்தனையை அழித்துக் கொண்டிருந்த போட்டியின் மனப்பான்மையை நிறுத்தும்படியாக அப்போஸ்தலர் முயற்சித்துக் கொண்டிருந்தார்.

**வசனம் 9.** அன்பை ஒப்பிடுகையில், 13:8ன் அற்புத வரங்கள் ஒரு பகுதி மாத்திரமே. சபையின் குழந்தைப் பருவத்தில், பரிபூரண வெளிப்பாடு வரும் வரைக்கும் அவர்கள் முக்கியமான உத்தேசத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். சபையைக் கட்டி எழுப்ப, அறிவு மற்றும் தீர்க்கதரிசனம் முக்கியமாக இருந்தது போலவே, அவைகள் நித்திய குணாதிசயத்திற்கு அஸ்திபாரமாக இருந்ததில்லை. இந்த காலத்துக்கு மற்றும் வருங்காலத்திற்கும் அன்பு அத்தியாவசிய-மாக இருக்கிறது. அற்புதமான அறிவு மற்றும் தீர்க்கதரிசனம் ஆவியின் வரங்களாக இருந்தாலும், அவைகள் ஒரு பகுதியாகவே சேவித்தது. பவுல் சொன்னது, **நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது**. தேவன் கிறிஸ்தவர்களுக்கு அன்பு கூரும் திறமையைக் கொடுத்திருக்கிறார். அவருடைய ஜனங்களான நமக்குள் அன்பு இருக்குமளவும், இந்த குணாதிசயம் நமக்குரியதாக இருக்கிறது; நாம் அன்புகூரும் அளவின்படியே, நாம் தேவனைப் போல மாறுகிறோம். ஆதலால், அது, ஒருவன் தன்னைத்-தான் கிறிஸ்துவின் அன்பினால் நிறைக்கும்போது, அவன் தன்னையே வெறுத்து மற்றவர்களின் நலனுக்காக செயல்படுவான்.

**வசனம் 10.** அன்பு சதாகாலமும் இருக்கும், ஆனால் ஆவியின் அற்புத வரங்கள் இருக்காது என்று ஏற்கனவே, பவுல் ஸ்தாபித்திருந்தார். காரணம், இது கொரிந்து கிறிஸ்தவர்கள் இந்த காலமற்ற, தேவன் தந்ததான அன்பின் குணாதிசயத்தை பிடித்துக்கொள்ள முடியும். அன்பானது, அவர்களின் இயற்கை கொடுப்பினை மற்றும் அவர்களுடைய விசேஷித்த ஆவியின் வரங்களை தேவனுடைய நாம மகிமைக்காக மற்றும் அவருடைய சபையைக் கட்டி எழுப்புவதற்காக பயன்படுத்த ஏவி ஊக்குவிக்கும். **நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்** என்று பவுல் எழுதும்போது, அவர் ஒரு நிச்சயமான அறிக்கையை செய்து கொண்டிருந்தார். அவர்கள் அன்பின் மேலாதிக்கத்தைப் பார்க்கும் படி விரும்பினார். கொரிந்தியர் உயர்ந்த ரகமாகப் பார்த்த, "குறைவான" வரங்கள், "நிறைவானது" வரும்போது முடிவடையும் என்பது உணர்த்தப்பட்டது. (*மேலும் கற்றுக்கொள்ள: "நிறைவானது" என்றால் என்ன?*, பக்கம் 139.)

**வசனம் 11.** "குறைவானது" மற்றும் "நிறைவானது" இவற்றிற்கு நடுவில் ஒரு ஒப்பிட்டு வரையப்பட்டி-ருக்கிறது. "நிறைவானது" என்பது ஒரு சரியான பக்குவப்பட்ட கிறிஸ்தவன் அன்பு என்னும் எண்ணத்-

திற்குள் பிணைக்கப்பட்டு, அற்புத வரங்களில் சொல்லப்பட்ட "குறைவான"தின் இல்லாமையினால், ஜீவிப்பதைக் குறிக்கிறது என்று ஒரு சிலர் சொல்லு-கிறார்கள். 13:11ல் அதற்கான ஆதாரத்தை அவர்கள் கண்டடைகிறார்கள். **நான் புருஷனான போதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்** என்று பவுல் எழுதுகிறார். ஆகிலும், பவுலின் உவமையானது "நிறைவான"தற்கு ஒரு நிச்சயமான விவரணையை அளிப்பதில்லை. "நிறைவான"தை குறித்து ஒருவர் எப்படி சொல்லி முடிக்கிறார்கள் என்பதைப் பார்க்-காமல், கவனிப்பின் அந்த வலுவானது செல்லு-படியாக இருக்கிறது. பக்குவமல்லாத காரியங்களுக்கு மற்றும்/அல்லது அற்புத வரங்களுக்கு அப்போஸ்தலர் ஒரு முடிவை எதிர்நோக்கினார். நிறைவானது வந்தபோது, கிறிஸ்தவர்கள் பக்குவமல்லாத காரியங்களோடு ஒண்டி இருக்க மாட்டார்கள். நாளடைவில், உண்மையுள்ளவர்கள் தேவகிருபையின் உச்சக்கட்டமாக பரலோகத்தை அனுபவிப்பார்கள்.

**வசனம் 12.** அற்புதங்களைச் செய்யும் திறனானது, தேவன் கிறிஸ்துவுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தின் சத்தியமாக இருந்தது. இன்று அவைகள் இருக்கிறது என்று சொல்லுகிறவர்கள் பார்வைக்குரிய, பொருளின் உறுதிப்படுத்தலைக் கோருகிறார்கள். தேவன் பேரிலான விசுவாசம் மட்டுமே போதுமானதாக இல்லாமல் இருந்தால் அடையாளங்கள் தேவைப்படுகிறது. பரலோக இராஜ்ஜியத்தில், கிறிஸ்தவர்கள் **கண்ணாடியிலே** பார்ப்பது போல நிழலாட்டமாய் காணமாட்டார்கள்,[11] பதிலாக, **முகமுகமாய்ப் பார்ப்பார்கள்**. தேவன் மோசேக்கு பயன்படுத்தின பாஷையையே அப்போஸ்தலர் எடுத்துக் கொண்டார்: "நான் அவனுடன் மறை பொருளாக அல்ல, முக முகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்" (எண். 12:8). பரலோகத்தில், மீட்கப்பட்டவர்களிடம் கர்த்தர் "வாயோடு வாயாக" பேசுவார்.

சபையில், புதிய ஏற்பாட்டின் வசனங்களின் கிறிஸ்தவ சட்டம் வரும் முன்பாக, அதிகாரம் மற்றும் போதனையோடு சேர்ந்து அற்புத வரங்களுக்கு ஒரு வேறுபட்ட உத்தேசம் இருந்தது என்பது இந்த வசனத்திற்கு ஒரு நியாயமான முடிவாக இருந்தது. இந்த கருத்தானது, மத ஆர்வலர்களால் "அற்புதம்" என்று அழைக்கப்படும் இந்த காரியம், நடுநிலை பார்வையாளர்கள் பரிசீலனையில் மூட நம்பிக்கை-யின் ஒரு மண்டலத்திற்குள் மறைந்து விடுகிறது. தேவன் தனிப்பட்ட விசுவாசிகளுக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையை அளிப்பதில்லை என்று விசுவாசிப்பவர்கள், தேவன் தம்முடைய உலகத்தில் காலடி எடுத்து வைக்கிறார் என்று விசுவாசிக்கத் தொடருகிறார்கள். எந்த பட்சபாதமும் இல்லாமல் தேவன் தம்முடைய ஜனங்களின் ஜெபத்தைக் கேட்டு பதிலளிக்கிறார்.

அடுத்த வசனத்தில், கிறிஸ்தவ நல்லொழுக்கத்தின் பட்டியலானது

கொரிந்தியர் நடுவில் இருந்த ஆவியின் வரங்களுக்கு போட்டியிடுவதற்கு நேர் மறையாக இருக்கிறது.

## தங்கியிருக்கும் நல்லொழுக்கங்கள்: விசுவாசம், நம்பிக்கை, மற்றும் அன்பு (13:13)

**13இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.**

**வசனம் 13.** பவுல் தான், அன்பின் மகத்துவம் உச்சக்கட்டத்தில் இருப்பதைச் சொல்லுவதின் மூல-மாக, அன்பைக் குறித்து புகழுவதின் பெரும் இறுதிக் காட்சியை அடைந்தார். **விசுவாசம், நம்பிக்கை, மற்றும் அன்பு,** ஆன்மீக ஜீவியத்தை மேலாக்கும் சாதாரணமான பண்பாக இருக்கிறது. அவ்வப்போது, பவுல் அவைகளை பொதுவான குழுவில் வைத்தார் (ரோமர் 5:1-5; கலா. 5:5, 6; கொலோ. 1:4, 5; 1 தெச. 1:3; 5:8; காண்க தீத்து. 2:2). ஆகிலும், இம்மூன்றிலும் அன்பே மிக முக்கியமானது என்று அப்போஸ்தலர் சொன்னார். இந்த குணாதிசயங்களில் கொரிந்தியர் வளர்ந்தபோது, ஆவியின் தெய்வீக வரங்களை (தீர்க்கதரிசனம், பற் பலபாஷைகள், மற்றும் அறிவு) பயன்படுத்துவது குறைந்த விளைவைத் தரும். அற்புத வரங்கள் இன்னும் அதிக விலையுயர்ந்த ஒன்றுக்கு ஒரு ஆயத்தமாக இருந்தது.

ஆழமான அர்த்தத்தில், அன்பானது, ஜனங்களை தேவனின் சாயலுக்கானவனையும் ஒரு பண்பாக இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் தனக்கு ஒரு புதிய ஜீவனைக் கொடுத்த தேவனின் குணாதிசயங்களை பிரதிபலிக்கும் கிறிஸ்தவ மனோரீதியாக இருக்கிறது.

பவுல் தன்னுடைய அன்பின் புகழ்ச்சியை மூன்று கூறுகளாக வைக்கிறார். முதலாவது, அன்பு ஒரு அத்தியாவசியமாக இருக்கிறது என்று அப்போஸ்தலர் அறிவித்தார். அன்பில்லாமல் ஆவியின் வரங்கள் அல்லது குணாதிசயங்கள் அர்த்தமற்றதாக இருக்-கிறது (13:1-3). இரண்டாவது, அன்பு ஒரு கிறிஸ்தவ குணாதிசயத்திற்கு முக்கிய அம்சமாக இருக்கிறது என்று பவுல் வாதாடினார். அன்பு, ஒரு கிறிஸ்தவன் உணரும் ஒரு நிச்சயமான வழி அல்ல; அது அவன் செயல்படும் முறையாக இருக்கிறது. ஒரு கிறிஸ்-தவன் இருதயம் மற்றும் மனதின் உணர்வுகளை தேவனை மற்றும் மற்றவர்களை சேவிப்பதற்கு மாற்றும் வரைக்கும், இந்த உணர்வுகள் சுய நுகர்வாக இருக்கிறது (13:4-7). மூன்றாவது, அன்பு நித்தியமானதாக இருக்கிறது. தெய்வீக வரங்கள், கிறிஸ்தவ காலத்தின் முதல் பகுதியில் சேவை செய்தது. மறு பக்கத்தில், அன்பானது, தேவனுடைய கட்டளையில் ஒரு நித்திய மூலப்பொருளாக இருக்கிறது (13:8-13).

## மேலும் கற்றுக்கொள்ள:

## “நிறைவானது” என்றால் என்ன? (13:10)

“நிறைவானது என்ன என்பதைப்பவுல்” 13:10ல் விவரிக்கவில்லை. அதன் விளைவாக, இந்த சொற்-றொடர் வெவ்வேறு வகையில் புரிந்து கொள்ளப்-பட்டுள்ளது. வியாக்கியானம் செய்பவர்கள் மூன்று விவரணையை கண்ணோக்க முற்பட்டிருக்கிறார்கள்.

*கண்ணோட்டம் 1: அன்பின் முகாந்திரமாக ஆவிக்குரிய முதிர்ச்சி.* சந்தர்ப்ப சூழலில் ஈர்க்கப்பட்டு, ஒரு சிலர் “நிறைவானது” என்றால் அன்பு, ஏனெனில் பவுல் அன்பை ஒழிந்து போகாத ஒன்றாக பார்த்தார் என்று வாதாடுகிறார்கள். இதற்கு எதிர்மறையாக, ஒழிந்து போகக் கூடியது அல்லது முதிரடைவது ஆவியின் வரங்கள். ஒரு கிறிஸ்தவன் முதிர்ச்சி அடையும்போது, அவன் அன்புகூரும் திறமையில் வளருகிறான் என்று காரணம் சொல்லுகிறது. அவனுடைய ஒவ்வொரு வார்த்தை மற்றும் செயலுக்கு அன்பு முதன்மையாகிறது. அன்பு வளரும்போது, அவனுடைய அற்புத வரங்களின் ஆசையானது மறைகிறது என்று முதிர்ச்சியானது அர்த்தப்படுகிறது. முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அன்பின் பரிபூரணத்தில் வளரும்போது, அவர்களுக்கு இன்னும் ஆவியின் வரங்கள் தேவையாயிருக்கவில்லை.

வசனம் 11 முதிர்ச்சியைக் குறித்துப் பேசுகிறது. ஒரு மனிதன் குழந்தை பருவத்திலிருந்து வயதுவந்த நிலை வரை, கிறிஸ்தவ ஆவிக்குரிய ரீதியில் வளருகிறார் மற்றும் கிறிஸ்தவ அறிக்கையை ஒன்று சேரும் ஆரம்ப உணர்வு தூண்டுதலுக்கு அப்பாற்பட்ட நிலைக்கு முன்னேறுகிறான். இந்த முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு, தாங்கள் பற்றியிருந்த அற்புத வல்லமைகளுக்கு குறைந்த ஆர்வத்தை காட்டுவது மற்றும் அன்பில் குறிக்கப்பட்ட வாழ்க்கையில் அதிக ஆர்வம் கொண்டதாக இருந்தது. முதிர்ச்சி என்பது, கிறிஸ்து கற்பித்துக் கொடுத்த நெறிமுறைகளைத் தழுவு வதாகும்.

கிறிஸ்தவர்கள் முதிர்ச்சி அடையும்போது, ஆவிக்குரிய வரங்கள் ஏன் குறைந்த முக்கியமாக இருக்கிறது என்று பார்ப்பதில் உள்ள கடினத்தன்மை, இந்த விவரனையின் பலவீனமாக இருக்கிறது. ஒருவர் அதிக ஆழமாக அன்புகூரும் திறனை வளர்க்கும் போது, பற்பலபாஷைகளை பேசுவது மற்றும் வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவது, முக்கியத்துவத்தை இழக்கிறது ஏன்? ஆவியின் வரங்கள் மற்றும் அன்பானது தகாததாக இல்லாமல் இருப்பதால், ஒன்றின் வளர்ச்சியே, மற்றொன்றின் சரிவாவது ஏன் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

*கண்ணோட்டம் 2: முடிவடைந்த கிறிஸ்தவ சட்டம்.* “நிறைவானதின்” இரண்டாவது புரிந்துகொள்ளுதல் சமுதாயம் சார்ந்ததாக இருக்கிறது. கொரிந்து சபையில் மற்றும் வேறிடத்தில்

இருப்பது போல தனிப்பட்டவர்களின் ஆவிக்குரிய முதிர்ச்சியில், இதனுடைய நோக்கம் இல்லை. சொன்னது போலவே, அற்புத வரங்கள், சுவிசேஷ செய்தியின் சத்தியத்தை உறுதி செய்வதற்காக மட்டுமே இருந்தது. இயேசு தன்னுடைய அற்புத செயல்களை, தேவன் தன்னை அனுப்பினார் என்ற உறுதிப்படுத்துவதற்காகவே என்று சொன்னார் (யோவான் 5:36). ஆதி கிறிஸ்தவ மிஷனரிகள் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று அறிவித்த போது, அவர்கள் செய்த அற்புதங்கள், அவர்கள் சொன்னதற்கு நம்பகத்தன்மையைக் கொடுத்தது (ரோமர் 15:19; 2 கொரி. 12:12; கலா. 3:5; எபி. 2:4). புதிய விசுவாசிகளிடம் விட்டுவிட, வசனத்தின் சட்டங்கள் இல்லாதபோது, முதலில், சுவிசேஷ பிரசங்கியார்கள் அறிவித்துக் கொண்டிருந்த அற்புத வரங்கள் சத்தியத்திற்கு அதிகாரத்தைக் கொடுத்தது.

பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷம் எழுதப்படும்படி செய்தபோது மற்றும் புதிய ஏற்பாட்டின் சட்டங்கள் அதின் இடத்தை பிடித்தபோது, "நிறைவானது" வந்தது. வசனத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், சுவிசேஷத்திற்கு அவர் சுமந்த சாட்சிக்கு அற்புத வரங்கள் ஒரு பங்காக மட்டுமே இருந்தது. "நிறைவானது" என்ற இந்த விவரனையின் ஆதரவாளர்கள், "நிறைவானது" என்பது முடிவடைந்த வசனத்தை நியமிக்க ஒரு சரியான வார்த்தையாக இருக்கிறது[12] என்று சுட்டிக்காட்டுகின்றனர். கூடுதலாக, அவைகள் அனுபவத்துக்கு முறையிடுகிறது. இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் அற்புதங்களை செய்தார்கள் என்று யாருமே சந்தேகப்படவில்லை. நவீன சபையில் அதே மாதிரியான அற்புதங்கள் நடக்கிறது என்று அநேகர் சந்தேகப்படுகிறார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு மத சார்ந்த காரியங்களில் இருக்கும் அதிகாரத்தைக் குறித்து இருக்கும் போராட்டத்திலிருந்து இந்த விவரணை உதிக்கிறது. வியாக்கியானம், சபையின் உபதேசத்திற்கு மற்றும் கிறிஸ்தவ ஜீவியத்தின் கேள்வியிலிருந்து ஆரம்பிக்-கிறது, மற்றும் அது 13:10ல் விடை பெறுகிறதாக சொல்லுகிறது. இன்றைய கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் அற்புத அறிவை, தீர்க்கதரிசன திறமை, அல்லது பற்பலபாஷைகளை பேசும் திறமையைக் கொடுத்தால், இந்த வரம்பெற்ற தனிப்பட்ட நபர்கள் சொன்ன செய்தியை ஒரு புதிய தேவ வெளிப்பாடாக பார்க்க வேண்டும். "நிறைவானது" என்பது "குறைவான" ஒன்று பரிபூரணமாகுதல் என்று நம்புவது பொருத்தமாக இருக்கும். ஆகிலும், அற்புத வரங்கள் முடிவடைவதற்குள், நிறைவேற வேண்டிய வரப்போகும் புதிய ஏற்பாட்டின் சட்டத்தைக் குறித்து கொரிந்தியர் அறியாமல் இருந்திருக்கலாம்; அதின் விளைவாக, பவுல் அவர்களோடு வசனங்களைக் குறித்துப் பேசியிருக்க மாட்டார் என்று தோன்றுகிறது.

இன்றைய தினத்தில் நடந்து கொண்டிருக்கும் அற்புதங்கள், பற்பலபாஷைகள், மற்றும் தீர்க்கதரிசனங்கள் 1 கொரிந்தியர் 13 விட்டு வேறு ஒரு இடத்தில் தீர்வடைய வேண்டும். உதாரணத்திற்கு, ஆரம்பிக்க, அப்போஸ்தலர் 8:1-18 ஒரு நல்ல வசன பாகமாக இருக்கும்.

*கண்ணோட்டம் 3: நித்திய ஜீவன்.* "நிறைவானதி"ற்கு மூன்றாவது விவரணை, பவுல் வரவிருக்கும் காலத்தின் வருகையைக் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார் என்று சொல்லுகிறது. அவர்கள் சொல்லுவது "நிறைவானது" என்பது தேவன், அடுத்த உலகில் மீட்கப்பட்டவர்களுக்கு ஆயத்தம் செய்திருக்கும் ஒரு வாழ்க்கை. இந்த ஒரு கண்ணோட்டத்தின்படி, பவுல் "... அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே, அறிந்து கொள்ளு வேன்" (13:12) என்று எழுதும்போது, அவருடைய விஷயம் பரலோகமாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் அநேக வசனங்கள் பதிவிட்டிருக்கும்படி, கரத்தரின் இரண்டாம் வருகை, நியாயத்தீர்ப்பு, மற்றும் நித்தியம் என்பது முதலாம் நூற்றாண்டின் கிறிஸ்தவர்களின் மனதில் மேலோங்கி இருந்தது. குறைவான காரியங்களான அற்புத வரங்கள், போன்றவை மிதமிஞ்சியதாக இருக்கும். இன்னொரு பக்கத்தில், அன்புக்கு ஒரு நித்திய பரிமாணம் இருக்கிறது. கிறிஸ்தவர்களாக, நாம், கர்த்தர் வரும்போது, நமது தேவனின் மற்றும் சக ஜனங்களின் பேரிலான அன்பை சுமந்து செல்வோம்.

பவுலின் கடிந்து கொள்ளுதலை புரிந்துகொள்ள இந்த இறுதி விவரணை ஒரு நல்ல வழியாக இருக்கிறது. கர்த்தர் வருமளவும் இந்த அற்புத வரங்களை கிறிஸ்தவர்களின் மத்தியில் செயல்படுத்த வேண்டும் என்று அது வாதாடுவதில்லை. மாறாக அதை விட, கர்த்தர் வரும்போது மற்றும் தேவ ஜனங்கள் அவரோடுகூட நித்திய ஜீவனை ஆரம்பிக்கும்போது, அற்புதத்திற்கு எந்த இடமும் இருக்காது என்ற அர்த்தத்தை கொடுக்கிறது. அக்காரணத்தைக் கொண்டு, "குறைவானது ஒழிந்துபோம்." வேறுபடும் பண்பில், அன்பு நித்தியமானது. அன்பு பரலோக மண்டலத்திலும் தேவைப் படுகிறது.

*முடிவுரை.* இந்த ஒவ்வொரு கண்ணோட்டத்திலும் கேள்வி எழும்புவதினாலே, "நிறைவானது" என்பது "குறைவானதாக" இருப்பதின் நிறைவேறுதலாக நிற்கச் செய்வதே சிறந்ததாக இருக்கும். இதன் தொடர்பாக மூன்று சித்தரிப்புகளைப் பயன் படுத்தினதை பார்ப்பது விவேகமுள்ளதாக இருக்கும். பவுல் வபாட்டின் அற்புதம், குழந்தைப்பருவத்தின் முதிர்ச்சியில்லாதன்மை, மற்றும் நமது முழுமையற்ற அறிவு, ஆகியவற்றை தோல்வி அடையும் அல்லது நின்றுபோகும் சித்தரிப்பில் பயன்படுத்தினார். அன்புக்கு ஒரு நித்தியமான, நிலையான மற்றும் நிலவும் குணாதிசயம் உள்ளது. வெளிப்பாட்டின் அற்புதம், "நின்றுவிடும்" (மற்றும் இன்றைய நாளில் நின்றுபோயிருக்கிறது). முதுமை வரும்போது குழந்தைப்பருவத்தின்

முதிர்ச்சியில்லா தன்மை ஒழிந்து போகும். விசேஷமாக நாம் பரலோகத்திற்குப் போகும் போது நம்முடைய அரை குறை அறிவும் மறைந்துவிடும். இதற்கு எதிர் மறையாக இருப்பது அன்பின் நித்தியத்துவம்.

## நடைமுறை பயன்பாடு

### அற்புதமான மற்றும் இன்றைய நாளின் சபை?

இந்த கால முடிவிற்கு முன்பு, அற்புத வரங்களான தீர்க்க தரிசனம், அறிவு, பற்பலபாஷை, குணப்படுத்துதல், மற்றும் அற்புதத்தின் முடிவை பவுல் கற்பனை செய்தாரா? அவைகள் நின்றுவிட்டதா, அல்லது அவைகள் எப்பொழுது நின்றுவிடும்? நூற்றாண்டுகளில், அங்கத்தினரில், ஆண்கள் மற்றும் பெண்கள் தங்கள் சொந்த தன்னிச்சை செயலாக அற்புத காரியங்களை சபை செய்ய முடிந்ததா? எல்லா மருத்துவ முயற்சிகளும் தோல்வி அடைந்த பிறகு வியாதியஸ்தரைக் குணப்படுத்தக் கூடிய கிறிஸ்த வர்கள் இன்றைய நாட்களில் இருக்கிறார்களா? இந்த கேள்விகள் வெறும் கல்வியாக இல்லை. அவைகள் சபையின் இயல்பு, சபையின் ஆராதனை, மற்றும் வசனத்தின் அதிகாரத்தின் நடத்தையைக் கொண்டுள்ளன.

இந்த கேள்விகளை ஜாக்கிரதையாகக் கட்டுவது முக்கியமானதாக இருக்கிறது. தேவன் ஜெபத்திற்கு பதில் அளிப்பவர் என்று கிறிஸ்தவர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அவருடைய ஜெபத்தின் பதிலளித்-தலின் வரையறை, நடக்காத ஒன்றை நடத்துவதில் அவருடைய இடையீடு உள்ளதாக இருக்கிறது. விசுவாசம் ஜெபத்தை செய்வதற்கு மட்டுமே அவசியமானதல்ல, ஆனால் தேவனுடைய பதிலளித்தலை பார்ப்பதற்குக் கூட அவசியமாக இருக்கிறது.

கொரிந்துவில் அற்புதங்களானது, ஜெபத்திற்கு தேவனுடைய பதிலளித்தலையும் மீறிப் போனது. பட்டணத்தில், அற்புத வரங்களைப் பெற்ற, ஒரு சில கிறிஸ்தவர்கள், ஒரு வியாதியஸ்தரை, மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவரைக் கூட சந்திக்கலாம், மற்றும் ஒரு வார்த்தையால் அவனை குணப்படுத்தலாம். பவுல் கூட கொரிந்துவில் மற்றும் வேறு இடங்களில் அத்தகைய காரியங்களைச் செய்தார் மற்றும், அவர் இவ்வாறாகச் சொல்ல முடிந்தது, “அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே” (2 கொரி. 12:12).

பவுல் கொரிந்துவுக்கு வரும் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, பேதுரு மற்றும் யோவான் எருசலேமில் ஒரு முடவனை சந்தித்திருந்தார்கள்.

பேதுரு அவனைப் பார்த்து, “நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட!” (அப். 3:6) என்றான். ஆவணம் தொடர்கிறது, “அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்” (அப். 3:8). இந்த முடவனைப் போல நிரந்தரமாக ஊனமடைந்த அநேக ஜனங்களை அப்போஸ்தலர்கள் குணமாக்கி இருக்கலாம். இந்த எல்லா ஜனங்களையும் குணப்படுத்தும் படி பேதுருவை பரிசுத்த ஆவியானார் நடத்தினார் என்று அப்போஸ்தலருடைய நடபடிகளில் எந்த ஒரு அறிகுறியும் இல்லை. பரிசுத்த ஆவியின் அற்புத வரங்கள் இன்றைய சபை வாழ்க்கைக்கு ஒரு பகுதியாக இருக்கிறது என்று சொல்லுவது என்றால், முதலாம் நூற்றாண்டில் ஆவியின் வரங்களைப் பெற்ற ஜனங்கள் செய்த அதே அற்புதங்களைச் செய்யும் தனிப்பட்ட மனிதர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லுவதாகும். இது, தேவன் கிறிஸ்தவர்களின் ஜெபத்தைக் கேட்டு தேவையான முறையில் பதிலளிக்கிறார் என்று சொல்லுவதைப் போல இல்லை.

புதிய ஏற்பாட்டில் அற்புதங்கள் தானாகவே முடிவதாக இருந்ததில்லை. அவைகள் சத்தியத்திற்கு ஒரு காட்சி மற்றும் அனுபவ சாட்சிகளைக் கொடுத்-தார்கள். கிரேக்க-ரோம உலகில், ஆரம்ப காலகட்ட சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பின்பு, மற்றும் புதிய ஏற்பாட்டின் சட்டத்தை எழுதி அதை அங்கீகரித்த பின், அற்புதங்களுக்கு அதே வகையில் முக்கிய பாத்திரம் இருந்ததில்லை. ஆதி சபையில், அறிந்திருந்த அற்புத வல்லமைகள் தொடர்ந்து வரும், நிரந்தர வாழ்வின் ஒரு பங்காக இல்லை என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது, மற்றும் நவீன அனுபவம் உறுதிப்படுத்துகிறது. தனிப்பட்ட கதைகள் மற்றும் சாட்சியங்களுக்கு மேலாக, நவீன உலகத்தின் கிறிஸ்தவர்கள் வாஸ்தவமான காரியத்தை எதிர் கொள்ள வேண்டும். பவுல், பேதுரு மற்றும் இயேசு செய்த அற்புதங்கள் இந்த நாளில் எளிதாக நடப்பதில்லை. அபூர்வமான அல்லது சாதாரணமானதற்கு, வித்தியாசமாக இருக்கும் நிகழ்வுகளை “அற்புதம்” என்று முத்திரை போட முடியாது.

---

குறிப்புகள்

[1]Maimonides (or “Rambam,” an acronym for “Rabbeinu Moshe Ben Maimon”) *Mishneh Torah*. [2]David E. Aune, *Prophecy in Early Christianity and the Ancient Mediterranean World* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983), 20-21. [3]பவுல் பொதுவாக தனது சொந்த வாழ்க்கையை தன்னுடைய போதனைகளை விளக்குவதற்கு அல்லது அவருடைய அறிவுரைகளுக்கு அளிக்கிற ஒரு உதாரணமாக பயன்படுத்தினார் என்று Carl R. Holladay கூறினார். (Carl R. Holladay, “1 Corinthians 13: Paul as Apostolic Paradigm,” in *Greeks, Romans, and Christians: Essays in Honor of Abraham Malherbe*, ed. David L. Balch, Everett Ferguson, and Wayne A. Meeks [Minneapolis: Fortress Press, 1990], 98.) [4]Ignatius *Letter to the Ephesians* 4; *Letter to the Philadelphians* 1. [5]William Harris, “‘Sounding Brass’ and Hellenistic Technology,” *Biblical Archaeology Review* 8 (January-February 1982): 38-41. [6]John Stott, *The Contemporary Christian* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1992), 148.

[7]இந்த வார்த்தைகள், வெவ்வேறு வடிவங்களில் இருந்தாலும், இரண்டுமே καίω (*kaiō*, "எரிவதற்கு") என்ற வினைச் சொல்லிலிருந்து வந்தது; அவைகளுக்கு அர்த்தத்தில் பாராட்டத்தக்க வேறுபாடு இல்லை. [8]Henry Drummond, *The Greatest Thing in the World* (Westwood, N.J.: Fleming H. Revell Co., n.d.), 23-24. [9]D. A. Carson, *Showing the Spirit: A Theological Exposition of 1 Corinthians 12—14* (Grand Rapids, Mich.: Baker Book House, 1987), 61. [10]James D. G. Dunn, *The Theology of Paul the Apostle* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1998), 675.

[11]சொற்றொடர் ἐν αἰνίγματι (*en ainigmati*, "ஒரு தடுமாற்று போல") புதிய ஏற்பாட்டில் மட்டுமே இங்கே தோன்றுகிறது. [12]யாக்கோபு 1:25ல் "பரிபூரண" (τέλειος, *teleios*) என்ற வார்த்தையும் பயன்படுத்தப்படுகிறது.